*14*

# சிலுவையின் அருகில் மக்கள்

## மத்தேயு 27; மாற்கு 15; லூக்கா 23; யோவான் 19

*"இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள்" (யோவான் 19:25).*

வேதாகமத்தைப் பயபக்தியுடனும் நேர்மையுடனும் படியுங்கள். பகுதிகளை ஒன்றுகூட்டவும் அந்த முழுச்சித்தரிப்பானது தெய்வீக வரலாறு ஒவ்வொன்றையும் தருகிறதைக் காணவும் முயற்சி செய்யுங்கள். கடினமாக உழையுங்கள். எல்லா முன் அனுமானங்களையும் உங்கள் இருதயத்தில் இருந்து துடைத்தெறியுங்கள்! எதை விசுவாசிக்க வேண்டும் என்பதைத் தேவன் உங்களுக்குக் கூற அனுமதியுங்கள். வேதாகமம் கூறாத விஷயத்தை அது கூறும்படியாக ஏற்படுத்த முயற்சி செய்யாதீர்கள்.

வேதாகமப் பாத்திரங்கள் பற்றிய நமது தீர்ப்புகள் நம்மைப்பற்றிய தீர்ப்புகளாகவே உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் நாம் நம்மையே காணுகிறோம். சிலுவையின் அருகில் இருந்த மக்களிடத்தில் இருந்து மாபெரும் போதனைகள் வந்துள்ளதை நாம் காணுவோம். அதற்குச் சமமான அளவில், சிலுவையின் அருகில் *இராத* மக்களிடம் இருந்தும் மாபெரும் பாடங்கள் வருகின்றன. உங்கள் கண்களை அகலத் திறந்து வைத்துக்கொள்ளுங்கள். பதில் அளிக்கப்படாத கேள்விகள், தேவன் கேட்டிராத கேள்விகளின் பதிலைப்போன்று அவ்வளவு அபாயகரமானவைகளாக இருப்பதில்லை.

### [சிலுவையருகில்] இருந்திராத சிலர்

*யூதாஸ்.* யூதாஸ் சிலுவையின் அருகில் இருக்கவில்லை. அவனது வரலாறானது மனிதர்களின் வரலாறுகள் யாவிலும் மிகவும் மோசமானதாக உள்ளது! தேவன் மனிதரைப் போன்று சிந்திப்பதோ அல்லது செயல்படுவதோ இல்லை. இதை யூதாஸ் தவிர வேறு யாரும் அதிகமாகச் செயல் விளக்கப்படுத்துவதில்லை. அவனது பெயரானது நமது முதுகு நரம்பு மண்டலத்திற்கு அதிர்ச்சியூட்டுகிறது.

சிலர் தேவன் யூதாஸைப் புறக்கணித்ததால்தான் அவன் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான் என்ற கருத்துத் தெரிவிக்கின்றனர். இது தேவனின்

பெருமையைக் குலைக்கிறது. தேவன் மக்களைத் தவறாகப் பயன்படுத்துவதோ அல்லது நிந்திப்பதோ இல்லை. இந்த வரலாற்றின் சமீபத்திய விளக்கங்கள் யூதாஸ் செய்த செயலுக்கு மகத்துவமான காரணம் ஒன்றைக் குறிப்பிடுகின்றன! "அவன் தனது மனதில் ஒரு மாபெரும் நோக்கம் இருந்ததால்தான் அவ்வாறு செய்தான்" என்று அவர்கள் கூறுகின்றனர். இவ்வாறு இருக்க முடியாது! இயேசு யூதாஸைத் தேர்ந்தெடுத்தார், யூதாஸ் இயேசுவைத் தேர்ந்தெடுத்தான், பின்பு யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதைத் தேர்ந்துகொண்டான்.

யூதாஸ் இயேசுவை நெருங்கி அவருக்கு முத்தம் இடுவதைக்கூட இயேசு அனுமதித்தார் (லூக்கா 22:47, 48). இயேசுவைக் கைதுசெய்த நிகழ்ச்சி முழுவதிலும் அவர் "இதைச் செய்யாதே - ஓடு, யூதாஸ், ஓடு" என்று பல்வேறு மாறுபட்ட வழிகளில் கூறிக்கொண்டிருந்தார்.

யூதாஸ் ஒரு வெற்றிகரமான மாய்மாலக்காரனாக இருந்தான் என்பது மாத்திரமே இதிலிருந்து நாம் தரவழைக்கக்கூடிய ஒரே முடிவாக உள்ளது. மற்ற பதினோரு அப்போஸ்தலர்களும், யூதாஸ் செய்யவிருந்ததைக் குறித்து அறிந்திருந்தனர் என்றால் அவர்கள் அவனை தடுத்திருக்கக் கூடும். அவனது புறம்பான தோற்றத்தின் மூலம் அவனது இருதயத்தை அவர்கள் அறியாதிருந்தனர். அவன் கொம்புகளையோ அல்லது குத்தும் கவைகளையோ கொண்டிருக்கவில்லை. யூதாஸ் தனது இருதயத்திற்குள் சாத்தான் நுழைய அனுமதித்திருந்தான் என்பதை இயேசு அறிந்திருந்தார், மற்றும் அவனை அவர் "கேட்டின் மகன்" என்று அழைத்திருந்தார் (யோவான் 17:12). யோவான் 12:4-6 வசனப்பகுதியானது, நம்பிக்கைக்குரிய பொருளாளரான யூதாஸ் குறுக்குப் புத்தியுள்ளவனாயிருந்தான் மற்றும் அவன் அப்போஸ்தலர்களின் பணப்பையில் போடப்பட்டவற்றைத் திருடியிருந்தான் எனக்கூறுகிறது.

சாத்தான் யூதாஸுக்குள் "நுழைந்தான்" (லூக்கா 22:3; யோவான் 13:27). தேவனுக்காகப் படைக்கப்பட்ட ஒரு மனிதன் அதை அனுமதித்தால், அவன் சாத்தானால் பயன்படுத்தப்படக்கூடும்; யூதாஸ் தனது பயங்கரமான செய்கையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோது அவனிடத்தில் இயேசு, "சீக்கிரமாய் செய்யும்படி" கூறினார் (யோவான் 13:26-30). அவன் ஒரு சீஷன் என்ற வகையில், தம் போதகரிடத்தில் நாணயமற்றவனாக இருந்தான். அவன் ஒரு சில ரூபாய்களுக்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.

ஒரு சில மனிதர்களே யூதாஸ் அளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்டிருந்தனர். அவன் இயேசுவுடன் மூன்று ஆண்டுகள் இருந்தான். அவன் விசேஷித்த சிலாக்கியங்களைக் கொண்டிருந்தான், ஆயினும் அவற்றிலிருந்து பயனடையத் தவறிவிட்டான். அவனால் கற்றுக்கொள்ள முடியாதிருந்தது; அவனால் தவறுகளை ஒப்புக்கொள்ள முடியாதிருந்தது; அவனால் மனந்திரும்ப முடியாதிருந்தது. நேரடியாகக் கூறுவதென்றால், யூதாஸ் இயேசுவின் கிருபையை ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருந்தான். யூதாஸ் மனமேட்டிமையினால் வருந்தியிருந்தான், அது கிருபையின் மூலமான மனந்திரும்புதல் அல்ல.

யூதாஸைப் போன்று வேறு எந்த மனிதரும் எச்சரிக்கப்பட்டிருக்கவில்லை.

*காட்டிக்கொடுப்பதற்குப் பல மாதங்களுக்கு முன்னதாகவே இயேசு, "பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்று கூறினார் (யோவான் 6:70). யூதாஸ் தான் மன்னிக்கப்படக்கூடும் என்று நினைத்திருக்கலாம், ஆனால் அவன் ஒரு அப்போஸ்தலனாக மறுபடியும் சீர்திருத்தப்பட வழியில்லாதிருந்தது. அவன் தனக்குள்ளாகவே, "இதற்குப் பின்பு, என் சகோதரர்கள் ஒருக்காலும் என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள முடியாது" எனக் கூறியிருக்கலாம். யூதாஸ் மரணத்தைக் காட்டிலும் அதிகமாக வாழ்வுக்குப் பயந்தான். அவன் தற்கொலை செய்துகொண்டான் - அது தற்காலிகமான பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வாக இருந்தது. இயேசுவுக்கு நெருக்கமாயிருந்த எல்லாரையும் இரட்சிக்கக் முடியாதிருந்தால், அது நம்மாலும் முடியாதே!*

*மற்ற அப்போஸ்தலர்கள்.* பன்னிரு அப்போஸ்தலர்களில் பதினோரு பேர் சிலுவையின் அருகில் காணப்படவில்லை. யூதாஸ் தற்கொலை செய்து கொண்டான், மற்றும் பத்துப்பேர் அவ்விடத்திற்கு வரவில்லை. யோவான் மாத்திரமே முழுத்தூரமும் சென்றார் ... இருப்பினும் அவரும்கூடச் சிலுவை அருகில் ஏதேனும் கூறினாரா என்பதற்கான பதிவுகள் எதுவும் நமக்கு இல்லை. இயேசு இன்னும் சிறந்தவற்றைப் பெறப் பாத்திரராக இருந்தார்! நாம் சிறந்தவற்றைச் செய்திருப்போமா?

அவர்கள் சிலுவையின் அருகில் காணப்படாதிருந்தாலும், இயேசு இன்னமும் மன்னித்து அப்போஸ்தலர்களைப் பயன்படுத்தினார். இது நமக்கு நம்பிக்கையைத் தருகிறது! அப்போஸ்தலர்கள் ஓடிவிட்டனர் (மத்தேயு 26:56; மாற்கு 14:50; சகரியா 13:7ஐக் காணவும்). தேவன் தாம் செய்வதை அறிகிறார் என்று விசுவாசம் நம்புகிறது! சிலுவை என்பது அப்போஸ்தலர்களுக்கு மிகவும் அதிகமானதாக இருந்ததா? வேதனையும் பெருந்துக்கமும் அவர்களை வெற்றிகொண்டதா? இயேசு சுமந்த துன்பங்களைப் பற்றி வேதாகமம் வலியுறுத்துவதில்லை. அது [அவரது] இரத்தத்தின் மதிப்பையும், நமது இரட்சிப்புக்கு அவர் அடைந்த மரணத்தையும் மற்றும் உயிர்த்தெழுதலையும் வலியுறுத்துகிறது.

*மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு.* இந்த மூவரும் சிலுவையின் அருகிலோ, கல்லறையிலோ அல்லது மேல்வீட்டிலோ இருந்ததாக குறிப்பாக குறிப்பிடப்படுவதில்லை (உதாரணமாக, மத்தேயு 27:55, 56, 61; மாற்கு 15:40, 47; லூக்கா 23:49, 55; 24:10; யோவான் 19:25; நடபடிகள் 1:13, 14 ஆகிய வசனங்களைக் காணவும்). இவர்கள் நடபடிகள் புத்தகத்திலோ அல்லது நிருபங்களிலோ பட்டியலிடப்படுவது இல்லை.[1] இயேசு தமது வாழ்நாளின் கடைசி நாட்களை இவர்களுடன்தான் செலவிட்டிருந்தார். அவர் இவர்கள்மீது அன்புகூர்ந்திருந்தார் (யோவான் 11:5).

பலவேளைகளில், நீங்கள் மிகவும் நேசிக்கிறவர்கள் மற்றும் நீங்கள் உங்களின் முயற்சிகளில் பெரும்பான்மையானவற்றை யாருக்காகச் செலவிட்டிருந்தீர்களோ அவர்கள் உங்களிடத்தில் மிகக்குறைந்த செல்வாக்குக் கொண்டிருக்கக் காண்பீர்கள். இந்த மூவரும் ஏற்கனவே மிகவும் அதிகமாகப் புண்பட்டிருந்தனரா (யோவான் 11:1-44)? லாசரு உயிர்ப்பிக்கப்பட்ட நிகழ்ச்சியானது இயேசுவைச் சிலுவையில் அறைதலைத் துரிதப்

படுத்தி இருந்தது என்பது கவனிக்கத்தக்கது. அவர்கள் சிலுவையினருகில் சென்று நின்றால், தங்கள் உயிர்வாழ்க்கை அபாயகரமாகும் என்று நினைத் தார்களா? இயேசுவுடன் இருத்தல் என்பது அவர்களுக்கு மிகுந்த இடர்ப் பாடாக இருந்திருக்குமா?

*மற்றவர்கள்.* இயேசுவுடன் பிறந்த சகோதரர்கள் அங்கிருந்தார்களா? அவர்கள் நடபடிகள் 1ன் மேல் வீட்டில் இருந்தனர், ஆனால் அவர்கள் சிலுவையின் அருகில் தங்கள் தாயுடன் இருக்கவில்லை. யோவான் அங்கிருந்தார், ஆனால் அவர்கள் அங்கிருக்கவில்லை (யோவான் 19:25-27).

பரபாஸ் அங்கிருந்தானா? அவனை நாம் ஒரு தீவிரவாதி என்று அழைக்கலாம் (மாற்கு 15:7; லூக்கா 23:18, 19). யூதர்கள் இயேசுவுக்கு மாறாகப் பரபாஸை விடுதலை செய்யும்படி தேர்ந்துகொண்டது பற்றி பிலாத்து அதிர்ச்சியடைந்தான் (மத்தேயு 27:15-23; மாற்கு 15:6-14; லூக்கா 23:17-23). பரபாஸ் செய்திருக்க வேண்டியது என்ன என்பது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இயேசு குணமாக்கியிருந்த மக்கள் பலரைப் பற்றிய விஷயம் என்ன? அவர்கள் அங்கிருந்தனரா? அவர்களும்கூட அங்கிருக்கச் சங்கடமோ அல்லது வெட்கமோ அடைந்தார்களா?

## [சிலுவையருகில்] இருந்த சிலர்

*சிரேனே ஊரானாகிய சீமோன்.* இயேசுவின் மனிதத்துவம் தவறிய போது, சீமோன் அங்கிருந்தார். இயேசுவினால் தமது சிலுவையை மேலும் சுமந்து போக முடியாதிருந்தது, எனவே கொல்கொதா செல்லும் பவனி தடைப்பட்டது (மத்தேயு 27:32; மாற்கு 15:21; லூக்கா 23:26).

இடையூறுகளைத் தவிர்க்கவே நாம் வழக்கமாக முயற்சி செய்கிறோம். சில இடையூறுகள் வேதனை நிறைந்தவையாக இருக்கக்கூடும். நாம் அடிக்கடி, "இந்த இடையூறுகளுக்குப் பின்பு, நாம் நம் வாழ்வுக்குத் திரும்ப முடியும்" என்று நினைக்கிறோம். இல்லை, இல்லை, இல்லை! வாழ்வு என்பது இடையூறுகளைத் தவிர வேறு எதுவுமில்லை. கிறிஸ்துவின் வாழ்வில் ஏற்பட்ட பல இடையூறுகளை பற்றிச் சுவிசேஷங்கள் நமக்குக் கூறுகின்றன. இந்த வேளையில், சீமோனின் வாழ்விலும் இடையூறு ஏற்பட்டது.

இயேசுவின் சிலுவையைச் சுமந்து வரும்படி சீமோனுக்குக் கூறப் பட்டது. இங்கு தேவனுடைய அருளிரக்கம் உள்ளது! இந்த மனிதர் தமது வாழ்நாளிலேயே ஒரு முறையான திருப்பயணமாகப் பல நூற்றுக்கணக் கான மைல்கள் நடந்து வந்திருந்தார். திடீரென்று, அவர் ஒரு கைதியின் சிலுவையைச் சுமந்து வரும்படி கட்டளையிடப்பட்டார்.

இவ்விடத்தில் மாற்கு ஆர்வமூட்டும் ஒரு பக்கக்குறிப்பை உட்செருகி னார். சீமோன் என்ற இவர், அலெக்சந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனாக இருந்தார் என்று அவர் கூறினார் (மாற்கு 15:21). இவர் ரோமர் 16:13ல் பவுல் குறிப்பிடுகிற ரூபு என்பவரின் தகப்பனாக இருக்கலாம், ஆனால் நாம் இதைப் பற்றி உறுதியாகக் கூற இயலாது.

*சீமோன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு இன்றும்கூடத் தாம் அறியப்பட்டிருப்போம் என்பதைப் பற்றிய கருத்து எதையும் கொண்டிரா திருந்தார். அவரது சிந்தனைகளும் நோக்கங்களும் என்னவாக இருந்தாலும், அவரது பெயரானது வேதாகமத்திலும் வரலாற்றிலும் என்றென்றைக்கும் இருக்கும். இயேசு நின்று கொண்டிருக்கக்கூட முடியாதிருந்தபோது அவரது சிலுவையை இவர் [சீமோன்] சுமந்து சென்றதற்காக நாம் இவருக்கு நன்றிக்கடன்பட்டுள்ளோம். சீமோன் சுமந்து சென்றது சிலுவையினு டைய குறுக்குக் கட்டையாகும். சீமோனே உங்களுக்கு நன்றி. தேவன் தமது குமாரனுக்கு உதவுபவர்களை எப்போதுமே ஆசீர்வதிக்கிறார்.*

*பெண்கள். இயேசு கொல்கொதா செல்லும் வழியில், பரிதபித்த, இருதயம் உடைந்த பெண்கள் (லூக்கா 23:27-31) அவருக்காக அழுதனர். இயேசு அவர்களுக்கு அச்சமூட்டும் வெளிப்படுத்துதல் ஒன்றைக் கொடுத் தார். அவர்கள் விரைவிலேயே தங்களுக்காக அழவேண்டியிருக்கும். எருச லேம் இயேசுவைச் சிலுவையில் அறைந்தது, ஆனால் தேவன் ரோமக் கைப் பற்றாளர்களால் (கி.பி. 67-70ல்) எருசலேம் அழிக்கப்படுவதை அனுமதிப் பார்.*

*பெண்கள் அங்கிருந்தனர். அவர்கள் ஓடிப்போய்விடவில்லை. அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டனர். அவர்கள் ஆழ்ந்த உணர்வெழுச்சியுடன் கண்ணோக்கினர். பிற்பாடு, பெண்கள் இயேசுவை அடக்கம் செய்வதற்கு உதவினர் மற்றும் அவரது கல்லறையைக் கவனித்தனர் (மத்தேயு 27:55-61; மாற்கு 15:40-47; லூக்கா 23:49-56). இயேசுவை அன்புகூரும் நல்ல பெண்களைத் தேவன் ஆசீர்வதிப்பாராக!*

*இயேசுவின் தாயாகிய மரியாள், சிலுவையின் அருகில் துக்கம் நிறைந்த வளாக நின்றிருந்தாள். அவள் அங்கிருந்தது பற்றி நாம் வியப்படைவ தில்லை. விஷயம் என்னவானாலும் எல்லா மக்களிலும் உங்களுடன் யார் இருப்பார்? உங்கள் தாய்தானே! பேதுருவைப் போன்ற நண்பர்கள் மறுதலித்து சிதறிப்போகின்றனர், ஆனால் நல்ல தாய்மார்கள் எப்போதும் அங்கிருப்பார்கள்! இயேசு தமது சிலுவையைக் விட்டுவிட இயலாதிருந்தது; மரியாள் தமது மகனைக் கைவிட இயலாதிருந்தது. அவள், அவர் செய்து கொண்டிருந்தது என்ன என்பது பற்றி முழுமையாகப் புரிந்துகொள்ளாதிருந்தாள், ஆனால் அவள் சிலுவையின் அருகில் நின்றிருந்தாள்.*

*யூதப்பெண் ஒவ்வொருத்தியும், தான் மேசியாவுக்குத் தாயாக வேண்டும் என்று ஜெபித்தாள். மரியாள் தன்னைத் தேவன் தமது குமாரனைப் பெற்று வளர்க்கத் தேர்ந்துகொண்டது பற்றி மெய்சிலிர்த்திருக்க வேண்டும் (லூக்கா 1:26-38). அவள் அந்த அறைகூவலினால் அச்சமுற்றிருக்கவும் வேண்டும். இவர் தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருந்தார்! இவரை வளர்த்தல் என்பது எதைப்போன்றிருந்தது? இயேசுவின் தாயாக இருக்க மரியாள் பெரும் விலையைச் செலுத்தினாள். தீர்க்கதரிசியான சிமியோன் என்பவர், “உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்” என்று கூறியிருந்தார் (லூக்கா 2:35). மரியாள் எவ்வாறு உணர்ந்திருப்பாள் என்பதை ஒரு தாய் மாத்திரமே கற்பனை செய்யக்கூடும். இயேசுவை வளர்க்க மரியாள் அன்போடு விலை செலுத்தினாள். சீஷத்துவம் என்பதும் நாம் விலைசெலுத்த வேண்டிய*

*விஷயமாக உள்ளது. நாமும்கூட அந்த விலையைச் செலுத்த மனவிருப்ப மாக இருக்க வேண்டும்.*

*இயேசுவுடன் வீட்டில் வாழ்வது என்பது எதைப்போன்றிருக்கும் என்று நாம் தொலைவில் இருந்து புரிந்துகொள்ள முடியுமா? அவரது மனிதத்து வத்தைப் புரிந்துகொள்வதென்பதைக் காட்டிலும் அவரது தெய்வத்து வத்தைப் புரிந்துகொள்ளுதல் மிகவும் சுலபமானதாக உள்ளது. மனிதத்து வத்தில் பேசும்போது, நாம் இயேசு ஒரு முதல்தரமான மாணவராக, மிகச் சிறந்த விளையாட்டு வீரராக, "மிகவும் நிச்சயமாக வெற்றிபெறுவார்" என்று வாக்களிக்கப்பட்ட இளைஞராக இருந்தார் என்று நாம் நினைக்கலாம். மரியாள், "இந்தப்பிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோ?" என்று வியப் படைந்திருக்கலாம் (லூக்கா 1:66ஐக் காணவும்). அவரை வளர்ப்பதில் அவள் என்ன ஒரு நல்ல அனுபவத்தைப் பெற்றிருந்திருக்க வேண்டும்!*

*இவ்விடத்தில் பாடம் என்னவாக உள்ளது? ஆவிக்குரிய விஷயங்களில், சரீரப்பிரகாரமான குடும்பம் எண்ணப்படுவதில்லை. தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல (நடபடிகள் 10:34). இயேசுவின் குடும்பத்திற்கென்று தனி யான சலுகை எதுவும் இல்லை. மரியாளும், இயேசுவின் சகோதரர்களும், அவருடைய சகோதரிகளும் மற்றவர்கள் செய்தது போன்றே சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது! அவர்கள் மற்ற எல்லாரும் செய்தது போன்றே கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆக வேண்டியிருந்தது, அவர்கள் அதைச் செய்தனர். அவர்கள் முதல் சுவிசேஷப் பிரசங்கம் பிரசங் கிக்கப்படுவதற்கு முன்பு நடந்த ஜெபக்கூட்டத்தில் இருந்தனர் (நடபடிகள் 1:13, 14). இயேசுவின் வளர்ப்புத் தகப்பனான யோசேப்பு, அவர் செய்யும் படி கேட்டுக்கொள்ளப்பட்ட விஷயத்தில் உண்மையுள்ளவராக இருந்தார். மரியாள் முதலில் தமது மகனுக்கும், பின்பு அவரது சபைக்கும் உண்மை யுள்ளவளாக இருந்தாள்.*

*இன்றைய நாட்களின் இருதயங்களில், மரியாள் தள்ளிவைக்கப்படு கிறாள் அல்லது தெய்வீகமாக்கப்படுகிறாள். இவ்விரு கண்ணோட்டங் களுமே தவறானவைகளாக உள்ளன. அவள் தெய்வீகத்திற்குரிய தனிச் சலுகையாக தகுதிநிலையைப் பெற்றிருக்கவில்லை, ஆனால் அவள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தாள் (லூக்கா 11:27, 28ஐக் காணவும்): அவளது மகனே அவளுக்கு இரட்சகரானார்! (நடபடிகள் 1:14ஐக் காணவும்.) அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்குப் பின்பு, வேதவசனங்களி லிருந்து மரியாள் விடப்படுகிறாள்.*

*இயேசுவின்மீது அன்புகூர்ந்திருந்த மற்ற பெண்கள் சிலுவையின் அருகில் இருந்தனர். மகதலேனா மரியாள் அங்கிருந்தாள். இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, முதலாவதாக மகதலேனா மரியாளுக்குக் காட்சியளித்தார், அவளிடமிருந்த ஏழு பிசாசுகளை அவர் துரத்தியிருந்தார் (மாற்கு 16:9; லூக்கா 8:2). யாக்கோபு மற்றும் யோசே ஆகியோரின் தாயாகிய மூன்றாவது மரியாளும் அங்கிருந்தாள் (மாற்கு 15:40). மேலும், யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் தாயான சலோமே என்பவளும் அங்கிருந்தாள், யோவன்னாளும் இருந்தாள் (லூக்கா 24:10). கலிலேயாவில் இருந்து வந்திருந்த பெண்களும் (மத்தேயு 27:55; மாற்கு 15:40, 41; லூக்கா*

*23:49, 55) அங்கு சிலுவையின் அருகில் இருந்தனர். சிலுவையை விட்டு கடைசியில் சென்றவர்களும் கல்லறைக்கு முதலாவது வந்தவர்களும் பெண்களே. நல்ல பெண்களுக்காகத் தேவனுக்கு நன்றி!*

*சிலுவை மீதிருந்த கள்வன். லூக்கா 23:39-43ஐ வாசியுங்கள். இந்தக் கள்வன் நம்மை வசீகரிக்கின்றான். இந்தக் கள்வனைப் போல் நாம் எவ்வாறு நினைக்கிறோம் என்பதைப்போல் வேறு எதுவும் வெளிப்படுத்துவதில்லை. நாம் மதிநுட்பமான வகையில் நேர்மையானவர்களாக இருக்கவும் நினைக்கவும் மனவிருப்பம் கொண்டுள்ளோமா?*

*கள்வன் இரட்சிக்கப்பட்டான். இயேசு பாவிகளுக்காகப் பாவிகளுடன் மரித்தார். அவர் பூமியில் இருந்தபோது, பாவத்தை மன்னிக்க அதிகாரம் கொண்டிருந்தார் (மத்தேயு 9:4-6; மாற்கு 2:8-11; லூக்கா 5:22-24). அவர் மரித்துக் கொண்டிருந்தார், ஆனால் அவர் மரித்தவராக இருக்கவில்லை - அவர் இந்த மனிதனுக்கு இரட்சிப்பைக் கொடுத்தார்.*

*சிலர், "இந்தக் கள்வன் மிகவும் மோசமானவனாக, மிகவும் விழுந்து போனவனாக, மிகவும் தாமதித்தவனாக, மற்றும் மிகவும் தூரம் சென்றவனாக இருந்தான்" என்று கூவுகின்றனர். தேவன் தமது கிருபையை எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று நாம் அவருக்குக் கூறாதிருப்போமாக! இயேசு யாரை இரட்சிக்க வேண்டும் என்று நாம் அவருக்குக் கூறாதிருப் போமாக! பாவி யாராக இருந்தாலும் இழந்துபோன நிலையில் வைக்கப் பட்டிருக்க ஏன் முயற்சி செய்ய வேண்டும்? பின்வருவதை மாத்திரம் நினைத்துப் பாருங்கள்: இந்தக் கள்வன் சிலுவையில் அறையப்பட்ட நாள்தான் அவனது வாழ்வில் உன்னதமான நாளாக இருந்தது!*

*"ஆனால் அவன் ஒன்றுமே செய்யவில்லையே" என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஓ, அவன் ஒன்று செய்தான்! அவன் வேளையை உரிமை கோரினான். அவன் தன்னால் இயன்றதைச் செய்தான். அவன் இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டான். அவன் மனம்வருந்தாத கள்வனைக் கடிந்து கொண்டான். அவன் ஒருவன் மாத்திரமே சிலுவையில் இயேசுவுக் காகத் தற்காப்பு வாதம் செய்தவனாக இருந்தான்.*

*"அவன் ஞானஸ்நானமின்றி இரட்சிக்கப்பட்டான்" என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஒருவேளை அப்படியிருக்கலாம் மற்றும் அப்படி இல்லாதிருக்கலாம்! இந்தக் கள்வன் ஞானஸ்நானம் <u>பெற்றிருக்கக்கூடும்</u> என்று சூழ்நிலைகள் கருத்துத் தெரிவிக்கின்றன. "யூதேயா முழுவதும்" யோவான் ஸ்நானனின் ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிந்தது (மத்தேயு 3:4-6; மாற்கு 1:4, 5). மதவாதிகள் யோவானையும் அவரது ஞானஸ்நானத்தையும் புறக் கணித்தனர் (லூக்கா 7:29, 30). ஆயக்காரர்களும் வேசிகளும் யோவானின் ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொண்டனர். பிற்பாடு இயேசுவும் அவரது சீஷர் களும், யோவானைக் காட்டிலும் அதிகமானவர்களை ஞானஸ்நானப் படுத்தினர் (யோவான் 4:1, 2). ஞானஸ்நானம் பெற்றிருக்கலாகாத ஒரு கள்வன் மீது உங்கள் ஆத்துமாவை சூதாட வேண்டாம். வெளிப்படுத்துதலினால் தீர்க்கப்பட இயலாத ஒரு கற்பனையில் இருந்து நித்தியமான முடிவொன்றை ஒருபோதும் தரவழைக்க வேண்டாம்.*

*இந்தக் கள்வன் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் மரித்தான்,*

*ஆனால் நாம் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்கிறோம் (கலாத்தியர் 6:2). இந்தக் கள்வன் மரித்தபோது, இயேசு மரித்தோரில் இருந்து உயிர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை; அவர் தமது பிரதான கட்டளையைக் கொடுத் திருக்கவில்லை (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16). இந்த வேளையில், பரிசுத்த ஆவியானவர் வந்திருக்கவில்லை; மக்கள் கிறிஸ்தவராவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கவில்லை. சபையானது நிலைநாட்டப்பட்டிருக்கவில்லை. (அது பெந்தெகொஸ்தே நாளன்று நடந்தது; நடபடிகள் 2ஐக் காணவும்.) இந்தக் கள்வனைப் போல் எவரொருவரும் இன்றைய நாட்களில் இரட்சிக்கப்பட இயலாது!*

*கடுமையான சிறுமைப்படுத்துதல் மற்றும் சிலுவையில் அறையப் பட்டதால் ஏற்பட்ட வேதனை ஆகியவற்றின்கீழ் இந்தக் கள்வன் தன்னால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் சிந்தித்தான். அவன் இன்னொரு கள்வனை அவனது தேவதூஷணத்திற்காகக் கடிந்துகொண்டான். அவன் அவர்களின் குற்றங்களை அறிக்கையிட்டான். அவன் இயேசுவுக்காகத் தற்காப்பு வாதம் செய்தான். அவன் "இராஜ்யத்தின் மொழியைப்" பயன்படுத்தினான். ஓரளவிற்கு அவன் உயிர்த்தெழுதலையும் கண்ணோக்கினான். கள்வனும் இயேசுவும் ஆகிய இருவருமே மரித்துக் கொண்டிருந்தனர். ஒரு மாபெரும் அற்புதம் அல்லது உயிர்த்தெழுதல் என்பது மாத்திரமே அவனுக்கு எதிர்கால நம்பிக்கை எதையும் அளிக்கக் கூடியதாக இருந்தது. அவன் மற்ற கள்வன் செய்தது போல் இயேசுவைத் தவறாகக் கையாள முயற்சி செய்யாதிருந் தான். அவனது உதவியற்ற நிலையில், அவன் தன்னை "கிருபாசனத்தினு டைய நீதிமன்றத்தின் முன்பாக கீழே" வீசினான். இது "மரணப்படுக்கையி லிருக்கும்போது இரட்சிக்கப்படுதல்" என்பதை எவ்வகையிலும் அங்கீ கரிப்பதில்லை. அந்தக் கள்வன் இயேசுவின்மீது தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டான், மற்றும் நரகத்திற்குப் பாத்திரனாக இருந்த இவன் பரலோகத்தைப் பெற்றுக்கொண்டான். சிலுவையானது நம்மிடத்தில் கூவுவது போன்றே அந்தக் கள்வனிடத்திலும் கூவியது: "வாழ்வு என்பது வீணானது அல்ல … தோல்வி என்பது மரணத்திற்கு ஏதுவானது அல்ல … மரணம் என்பது நிறைவானது அல்ல!"*

*கூட்டத்தார்.* வழியில் நடந்து சென்றவர்கள் வெறித்து நோக்கி, கவனித்து, சிலுவையில் அறையப்பட்டிருந்தவர்களை திட்டிக்கொண்டிருந் தனர் (மத்தேயு 26:65-68; 27:47-49; மாற்கு 14:65; 15:29-36). சிலுவைகள் மனிதனுக்குள் இருக்கும் மனிதப்பண்பின்மையை வெளிக்கொண்டு வந்தன. பார்த்தவர்களுக்கு, இது ஒரு விளையாட்டாக - ஒரு அழகற்ற, இரத்தம் சிந்தும் விளையாட்டாக - இருந்தது. பரிசோதனைகள் ஊக்கப் படுத்தப்பட்டன: "கீழே வா …"; "அங்கேயே இரு …"; "அவனுக்கு மலிவான காடி கொஞ்சம் கொடுங்கள்"; "ஒருவேளை எலியா வருவானோ!" என்ன ஒரு காட்சி! இன்றைய நாட்களில், இவ்வுலகமானது எதிர்ப்பாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. தேவைப்பட்டபோது இந்த எதிர்ப் பாளர்கள் எங்கிருந்தனர்? "இவனது இரத்தம் எங்கள்மீதும் எங்கள் பிள்ளைகள் மீதும் இருக்கட்டும்!" என்று கும்பல் கூவியிருந்தது (மத்தேயு 27:25). அவர்கள் பெற்றிருந்த மன உறுதிக்கு அவர்கள் எவ்வளவு பெரிய

விலை செலுத்தியிருந்தனர்!

*விரோதிகள்.* அவர்கள் மனமேட்டிமையுடன், "நாங்கள் அதைப் பற்றி அக்கறை எடுத்தோம்!" என்று கூறினார்கள். இருப்பினும், ஞாயிற்றுக் கிழமை வந்தது. அவர்கள் தங்களின் சொந்த வலையை அமைத்திருந்தனர். உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, கிறிஸ்தவமானது உலகம் முழுவதிலும் புயல் போல் பரவிற்று. வேதாகமரீதியான யூதத்துவம் முடிந்து போயிற்று. கி.பி. 70ல் எருசலேம் பிடிக்கப்பட்டது. கருத்து என்னவாக உள்ளது? பின்வருவது மாத்திரமே: எவரொருவரும் தேவனுக்கெதிராக போராடி வெற்றிபெற இயலாது.

*ரோமப் போர்ச்சேவகர்கள்.* சேவகர்கள் இயேசுவுக்கு ராஜரீக உடை உடுத்தி பின்பு ஒரு கேலி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர் (மத்தேயு 20:17-19; 27:27-31; மாற்கு 10:32-34; 15:16-20; லூக்கா 18:31-34; 23:11; யோவான் 19:1-5). இயேசு கடுமையாக அடிக்கப்பட்டிருந்தார். சேவகர்கள் அவரது உடைக்காகச் சீட்டுப்போட்டனர் (மத்தேயு 27:35; மாற்கு 15:24; யோவான் 19:23, 24). இது காயத்துடன் அவமானத்தைக் கூட்டியது. இருப்பினும், ரோம நூற்றுக்கு அதிபதி ஒருவர் விருப்பநோக்குடன் கவனித்தார். அவர், இயேசு மாறுபட்டவராக இருந்தார் என்று கண்டார். அவர் நாம் யாவரும் செய்ய வேண்டியது போலவே, "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்" என்று முடிவு செய்தார்! (மத்தேயு 27:54; மாற்கு 15:39; லூக்கா 23:47ஐக் காணவும்).

*அரிமத்தியாவூர் யோசேப்பும் நிக்கொதேமுவும்.* அரிமத்தியாவூர் யோசேப்பும் நிக்கொதேமுவும் கிறிஸ்துவின் சரீரத்தைக் கொடுக்கும்படி தைரியமாய்க் கேட்டனர் (மத்தேயு 27:57-61; மாற்கு 15:42-47; லூக்கா 23:50-56; யோவான் 19:38-42). நாம் அவர்களைப் பாராட்டுகிறோம், ஏனெனில் அவர்கள் இயேசுவை அடக்கம் செய்தனர்.

மிகவும் அதிகமான மக்கள் இவ்விருவரும் இதைச் செய்த வகையைப் பற்றிச் சிந்திக்கின்றனர். மிகவும் அதிகமானவர்கள் தேவனுக்கு அறிவுரை வழங்கும் பதவியில்மாத்திரம் அவருக்கு ஊழியம் செய்ய விரும்புகின்றனர். மிகவும் அதிகமானவற்றைச் செய்திருக்கக்கூடிய இரு மனிதர்களும் மிகவும் கொஞ்சமானதையே செய்தனர்! அவர் உயிருடன் இருக்கையில் ரகசிய மாக அவர்கள் விசுவாசித்த ஒருவரின் இறந்த சடலத்தை மாத்திரமே அவர்கள் உரிமை கோரினர். இயேசு நமது வாழ்வைக் கேட்கிறார்; சில வேளைகளில் நாம் அவருடைய சரீரத்திற்கு நறுமணமூட்ட மாத்திரம் மன விருப்பமாயிருக்கிறோம்! யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோர் என்னவானார்கள் என்று நமக்குக் கூறப்படுவது இல்லை. அவர்களின் நடவடிக்கைக்குத் தைரியம் தேவைப்பட்டது, ஆனால் இயேசுவை அறிக்கையிடவும், அவரை கர்த்தராக ஏற்றுக்கொள்ளவும்தான் உண்மை யான தைரியம் தேவைப்படுகிறது.

உயிருள்ள நம்பிக்கைக்குச் செய்வதைக் காட்டிலும் இழந்துபோன காரணம் ஒன்றிற்கு சிலர் அதிகமானவற்றைச் செய்வார்கள். உயிருள்ள கர்த்தருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் மரித்தவரை அடக்கம் செய்தல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது.

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]நிருபங்கள் என்பவை புதிய ஏற்பாட்டின் பிற்பகுதியிலுள்ள இருபத்தியோரு புத்தகங்களாகும், இவைகள் தொடக்கத்தில் கிறிஸ்தவர்களுக்குக் கடிதங்களாக எழுதப்பட்டன. இவைகளில், கிறிஸ்தவ வாழ்வை வாழ்வது எப்படி என்பதற்கு மதிப்புள்ள போதனைகள் அடங்கியுள்ளன.